[6th September 1960

களானுல் அதை அரசாங்கம் பரிசீலனை செய்யும். கார்டன் லான்டாகயிருந்தால், 250 ரூபாயாகயிருந்தால் அதில் பாதி கொடுத்தால் அதையும் பரிசீலனை செய்ய திட்டமிருக்கிறது.

Sri S. M. ANNAMALAI : புஞ்சை நிலத்திற்கு 150 ரூபாயும் நஞ்சை நிலத்திற்கு 300 ரூபாயும் கொடுத்து வாங்கி வீட்டுமனைகள் கொடுப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இப்படி எந்த இடத்தில் எப்போது கிடைத்திருக்கிறது, இவ்விதம் புஞ்சை நிலத்திற்கு 150 ரூபாயும் நஞ்சை நிலத்திற்கு 300 ரூபாயும் கொடுத்து சர்க்கார் வாங்கித்தர முடியுமா? எந்த இடத்தில் இவ்விதம் கிடைக்கிறது என்று சொல்ல முடியுமா?

The Hon. Sri P. KAKKAN : ஜாஸ்தியாக உணவு உற்பத்தி செய்கின்ற இடத்தில் இந்த விலைக்கு வாங்க முடியாது என்பது உண்மைதான். உணவு உற்பத்தி அதிகம் செய்ய முடியாத இடங்களாக இருந்தால், அவைகளைப் பார்த்து எங்கே "சீப்"பாக கிடைக்கும் என்பதைப் பார்த்து வாங்க சர்க்கார் ஏற்பாடு செய்திருக்கிறது.

Sri K. B. S. MANI : ஏழைகளுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கும் திட்டம் சர்க்காரில் இருந்தபோதிலும், இதனுல் எல்லோரும் திருப்தி அடைவதாக தெரியவில்லை. ஆகவே ஏழைகள் எங்கெங்கு குடியிருக்கின்றுர்களோ அந்தந்த இடங்களையே அவர்களுக்கு பட்டா செய்து கொடுப்பதற்கு, அதாவது நத்தம், சேரி, புறம்போக்கு போன்ற இடங்களில் இருந்தால் அவைகளை பட்டா செய்து கொடுப்பதற்குச் சர்க்காருக்கு என்ன கஷ்டம் இருக்கிறது? அவ்விதம் ஏதாவது கஷ்டங்கள் இருந்தால் அதற்கு ஒரு ஸ்பெஷல் கமிட்டியை நியமித்தோ அல்லது வேறு வழியிலோ நிவர்த்தி செய்து பரம்பரையாக குடியிருக்கின்ற ஏழை மக்களுக்கு பட்டா செய்து கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா?

The Hon. Sri P. KAKKAN : விவசாயத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுப்பதைப்பற்றித்தான் இந்தக் கேள்வியில் இருக்கின்றன. கனம் அங்கத்தினர் இப்போது குறிப்பிடுவது ஹரிஜனங்களைப்பற்றியது. அதற்குத் தனியாக கேள்வி போட்டால் பதில் தெரிவிக்கலாம்.

Amaravathi Puduvaikal

*** 475 *Q.*—Sri P. S. CHINNADURAI :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தாராபுரம் தாலுகா அமராவதி புது வாய்க்காலில் 17, 18-ம் நெம்பர் மதகுகள் கட்டப்பட்டுத் திறக்கப்படாமலும், கிளை வாய்க்கால்கள் வெட்டப்படாமலும் இருப்பது பற்றிய மகஜர், சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள விவசாயிகளிடமிருந்து அரசாங்கத்துக்கு வந்ததா?

6th September 1960]

(ஆ) அப்படியானல், அதன்மீது அரசாங்கம் இதுவரை எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

THE HON. SRI P. KAKKAN : (அ) Yes Sir.

(ஆ) On examination, it has been found that sluices Nos. 17 and 18 of the Amaravathi Main Canal were completed during the year 1958–59 and that water was being let in through the branch channels from 1959.

Prices

* 476 Q.—SRI P. G. MANICKAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விலைவாசிகளை ஸ்திரப்படுத்துவது சம்பந்தமாக பொதுக் கொள்கையை உருவாக்கும் பொறுப்பை ராஜ்ஜிய முதன் மந்திரிகளிடம் விட்டுவிட 1960-ம் வருட மார்ச் மீ 20-ம் தேதி டெல்லியில் நடைபெற்ற தேசீய அபிவிருத்திக் கவுன்ஸில் தீர்மானத்தின் பேரில் சென்னை சர்க்கார் திட்டக் கமிஷனுக்கு என்னென்ன கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்?

THE HON. SRI C. SUBRAMANIAM : The National Development Council at its meeting held on the 19th and 20th March requested the Chief Ministers of States to forward their suggestions relating to price policy for the Third Plan for consideration at the meeting of the National Development Council to be held on 17th April. The suggestions of the State Governments are now under consideration of a High Level Committee set up by the National Development Council. It is not in the public interest to divulge the nature of the suggestions made by the Government.

SRI P. G. MANICKAM : ஸார், கனம் அமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி அந்த ஹை லெவல் கமிட்டியில் யார் யார் அங்கத்தினர்களாய் இருக்கிறார்கள் ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Some of the members of the Planning Commission, some of the Chief Ministers of States and some of the Finance Ministers of States.

SRI N. R. THIAGARAJAN : ஸார், இந்த விலைவாசிகளை சீர்படுத்தும்பொழுது, கிராமங்களிலுள்ள விவசாயிகள், தங்களுக்கு அரிசியினுடைய விலை, பருப்பினுடைய விலை, புளியினுடைய விலை மிளகாயினுடைய விலை இவைகள் எல்லாம் குறைந்து விட்டன என்று குறை கூறிக்கொண்டேயிருக்கிறார்கள். ஆகவே, அரிசியின் விலை, பருப்பின் விலை, புளியின் விலை, மிளகாய் விலை இவைகளை எல்லாம் உயர்த்திக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்வார்களா ? அல்லது விலை குறைவை ஈடு செய்வதற்கு சர்க்காரிலிருந்து ஏதாவது சப்ஸிடி கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கண்ட்ரோல் என்று சொல்லும்போது விலை மேலே உயர்ந்து போகாமல் பார்த்துக் கொள்வதுபோல், விலை கீழே போய்விடாமலும் பார்த்துக்கொள்ள